பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 06 2023 **THURSDAY** **12.40PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் தொடர்ந்து ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2. நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. நீலப்பொருளாதாரத்தில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக புவி அறிவியல் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் குறுவை சாகுபடி பணிகள் குறித்து வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம், இன்று தஞ்சாவூரில் விவசாயிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

5. ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

----- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<<>>>>>

ரிசர்வ் வங்கி வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை அறிக்கையை இன்று மும்பையில் வெளியிட்டு காணொலி வாயிலாக பேசுகையில், அதன் கவர்னர் திரு சக்தி காந்ததாஸ் இதனை தெரிவித்தார்.

பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகள் பணவீக்கம் குறித்து கவலை கொண்டுள்ள நிலையில், இந்தியாவில் அது குறைவாக உள்ளதாக தெரிவித்தார்.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, நடப்பு நிதியாண்டில் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நடப்பு நிதியாண்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா தொடர்ந்து திகழும் என்றும் திரு சக்திகாந்த தாஸ் கூறினார்.

<<<<<<<>>>>>

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு வெகுவாக உயர்ந்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

வெளியுறவுக்கொள்கை தொடர்பான மத்திய அரசின் ஒன்பது ஆண்டு சாதனைகள் குறித்து இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பெரும்பாலான நாடுகள் இந்தியாவை வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு நாடாக கருதுவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகள் பொருளாதார சிக்கலை சந்தித்துவரும் சூழலிலும், நமது பொருளாதாரம் வலுவாக உள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சுகாதார சேவைகள் மக்களுக்கு எளிதாக கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சுகாதாரத்துறையில் மத்திய அரசின் ஒன்பது ஆண்டு சாதனைகள் குறித்து வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த துறையில் தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக, கோவிட் தடுப்பூசி, தொலைபேசி வழி மருத்துவ சேவை, சுகாதார ஆவணங்களை எளிதாக அணுகுவது போன்றவை சாத்தியமான குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பிணி பெண்களுக்கான நலத்திட்ட உதவிகள் மூலம், 12 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாக திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, சுகாதார சேவைகளின் தரம் மேம்பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

நீலப்பொருளாதாரத்தில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக புவி அறிவியல் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

சர்வதேச கடல் தினத்தையொட்டி, இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கடல் ஆதாரங்களின் மூலம், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை 10 சதவீதத்திற்கும் கூடுதலாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆழ்கடல் படுகையில் ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்காக ஆளில்லா ஆய்வுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவை அடுத்த 24 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் நோக்கத்தை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை கடல் தொழில்நுட்பத்துறை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னதாக, சென்னையில் பெசன்ட் நகர் கடற்கரையில் தூய்மைப்பணிகளையும் திரு கிரண் ரிஜிஜூ தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் குறுவை சாகுபடி பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தஞ்சாவூரில் இன்று நடைபெற்றது.

மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தஞ்சாவூர்,

திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி, அரியலூர், கடலூர் ஆகிய ஏழு மாவட்டங்களின் விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஜம்முவில், ஸ்ரீ வெங்கடேஷ்வரா சுவாமி திருக்கோவிலை காணொலி வாயிலாக இன்று திறந்துவைத்தார்.

62 ஏக்கர் நிலப்பரப்பில் 25 கோடி ரூபாய் செலவில், இந்த கோவில் கட்டப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் **Chenad** ஆற்றின் குறுக்கே இருவழி மேம்பாலப்பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 20 கோடி ரூபாய் செலவில் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் சாலை வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் தொடரும் என்றும் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையிலான உத்திசார் வர்த்தகப் பேச்சுவார்த்தை வாஷிங்டனில் நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இம்மாதம் 21ஆம் தேதி அமெரிக்க செல்ல உள்ளதை ஒட்டி இப்பேச்சுவார்த்தை நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய தரப்பில் வெளியுறவுத்துறை செயலாளர் திரு. வினய்மோகன் குவாத்ரா தலைமையிலான குழு இதில் பங்கேற்றது.

செமிகண்டக்டர்கள், விண்வெளி, தொலைதொடர்பு, செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>

இலங்கை பாதுகாப்புப்படைகளின் திறன்களை மேம்படுத்த இந்தியா உதவிகளை வழங்கும் என பாதுகாப்புத்துறை செயலாளர் திரு கிரிதர் அரவனே கூறியுள்ளார்.

இந்தியா - இலங்கை இடையிலான கருத்தரங்கு மற்றும் கண்காட்சிக்கு கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதை அந்நாட்டு பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு பிரேமிதா பண்டாரா தொடங்கிவைத்தார்.

இதில் காணொலி வாயிலாக உரையாற்றிய பாதுகாப்புத்துறை செயலாளர் திரு கிரிதர் அரவனே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை அடிப்படையில் இந்தியாவின் கடல்சார் கொள்கை அமைந்துள்ளது என்று கூறினார்.

தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத குடியேற்றம் போன்றவை இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள பொதுவான சவால்கள் என்றும், இவற்றை எதிர்கொள்ள மேலும் அதி ஒத்துழைப்பு தேவை என்றும் திரு கிரிதர் அரவனே தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் இரு நாடுகளை சேர்ந்த பாதுகாப்புத்துறை தொடர்பான நிறுவனங்கள் தங்களது உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்தியிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

அமெரிக்கா சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் திரு. ரிஷி சுனக், இன்று அந்நாட்டு அதிபர் திரு. ஜோ பைடனுடன் பேச்சு நடத்த உள்ளார்.

யுக்ரைன் விவகாரம் உள்ளிட்ட முக்கிய சர்வதேச பிரச்சினைகள் குறித்து அவர்கள் ஆலோசனை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

பிரிட்டன் பிரதமராக திரு. ரிஷி சுனக் பதவியேற்றபின் அமெரிக்கா செல்வது இதுவே முதல் முறையாகும்.

<<<<<<<>>>>>

பங்களாதேஷில் கடும் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் 5 புள்ளி 2 சதவீதமாக இருந்த மின்சார பற்றாக்குறை இந்த மாதத்தில் 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.

2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்நாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான மின்பற்றாக்குறை இது என தகவல் வெளியாகி உள்ளது.

இதன் காரணமாக தலைநகர் டாக்கா உள்ளிட்ட அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக ஆய்வு செய்த பின் கருத்து தெரிவித்த அந்நாட்டு பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா, மின்சார தட்டுப்பாட்டிற்கு சர்வதேச சூழ்நிலைகளும் ஒரு காரணம் என்று கூறினார்.

அடுத்த 10 முதல் 15 நாட்களில் மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு நிலைமை சமாளிக்கப்படும் என திருமதி ஷேக் ஹசீனா உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

----------------------

ஆசிய ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில், இந்தியா - சீன தாய்பே இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.

-------

புரோ லீக் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 8.40-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து 4-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

-----------------------

மாலத்தீவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் டஸ்னிமிர் மற்றும் மிதுன் மஞ்சுநாத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

ஆசிய விளையாட்டுப்போட்டிகளுக்கான தயார் நிலை குறித்து மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொள்கிறார்.